மெட்ரோ ரெயில், தொழில் பூங்காக்கள், நதிநீர் இணைப்பு திட்டங்களுக்கு

# மத்திய அரசு உதவிக்கரம் நீட்டவேண்டும்

## அமித்ஷாவிடம், எடப்பாடி பழனிசாமி நேரில் கோரிக்கை மனு வழங்கினார்

சென்னை, நவ.22–
மெட்ரோ ரெயில் திட்டம், புதிய தொழில்பூங்காக்கள், நதிநீர் இணைப்பு திட்டங்களுக்கு மத்திய அரசு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்று அமித் ஷாவிடம், எடப்பாடி பழனிசாமி 3 கோரிக்கை மனுக்களை நேரில் வழங்கினார்.

### 3 கோரிக்கைகள்

முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, மத்திய மந்திரி அமித்ஷாவிடம் 3 கோரிக்கை மனுக்களை கொடுத்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

### ஜவுளி பூங்காக்கள்

சென்னை மெட்ரோ ரெயில் திட்ட முதல் கட்ட பணிகளில் இருந்ததைப்போல 50:50 என்ற அளவில் 2–வது கட்ட பணிகளுக்கும் மத்திய அரசு விரைந்து ஒப்புதல் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் முதல் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு திருத்தப்பட்ட செலவு மத்திய வீட்டு வசதி மற்றும் ஊரக விவகார துறையின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு விரைந்து ஒப்புதல் கொடுக்கவேண்டும்.

மெகா ஜவுளி பூங்காக்களை தர்மபுரி மாவட்டத்திலும், விருதுநகர் மாவட்டத்திலும் அமைக்க இடம் கண்டறியப்பட்டுள்ளது. இதுபோலபெரிய அளவில் மருந்து பூங்கா மற்றும் மருத்துவ உபகரணங்கள் பூங்கா ஆகியவற்றை சென்னைக்கு அருகில் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட மந்திரிகள் இந்த பூங்காக்களை தமிழகத்தில் அமைக்கதேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க வேண்டும்.

### நதிகளை இணைக்கும் திட்டம்

தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தின் கீழ் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை கோதாவரி–காவிரி (கல்லணை) இணைப்பில் முதல் திட்டம் தொடர்பாக ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் அனுப்பியிருந்தது. தமிழக அரசு இந்த இணைப்பை கல்லணைக்கு பதிலாக கட்டளை தடுப்பணையோடு முடிக்க, அதற்கான தேவையை அனுப்பியிருந்தது.

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (கட்டளை–குண்டாறு திட்டத்துக்கு) ரூ.8 ஆயிரத்து 277 கோடி செலவில் ஒரு விரிவான திட்ட அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. இந்த திட்டத்துக்கு ஒப்புதல் அளித்து தேவையான நிதி உதவி வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

காவிரியை மாசு இல்லாத நதியாக புத்தாக்கம் பெற ரூ.10 ஆயிரத்து 700 கோடி செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலையும், நிதி உதவியையும் அளிக்கும்படி ஜல்சக்தி அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.